DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.3 |
| Name | : | லதா |
| Husband Name: | | ரெங்கராஜ் |
| Village | : | பிள்ளையார்பாளையம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 43/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1–பழனிசாமி , A2–ரெங்கராஜ், A3–செல்லதுரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள். அ.சா.1 கந்தசாமியை எனக்கு தெரியும். அவரும் எனது பக்கத்து காட்டுக்காரர் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் மாலை 4 மணியளவில் கந்தசாமி காட்டில் சத்தம் கேட்டு நாங்கள் எங்களது காட்டிலிருந்து ஓடி போய் பார்த்த போது கந்தசாமியும், பழனிசாமியும் அடித்து கொண்டு இருந்தார்கள். நானும் அருள்மொழியும் சண்டையை மறித்து விலக்கி விட்டோம். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) அ.சா.2–அருள்மொழி நான் செல்வதற்கு முன்பாகவே சம்பவ இடத்தில் இருந்தார் என்றால் சரிதான். கந்தசாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் தூர

சொந்தத்தில் அப்பா முறை வேண்டும். நாங்கள் காட்டிலேயே குடியிருந்து வருகிறோம். கந்தசாமி ஊருக்குள் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிரி பழனிசாமி லாரி டிரைவாக உள்ளார் என்றால் சரிதான். முத்துகுமாரை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அங்கு தான் இருந்தார். கந்தசாமி நிலம் நெல் பயிரிட்ட நன்செய் நிலம் என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தின் போது கந்தசாமி காட்டிற்கு போலிசார் வந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(ii) கந்தசாமிக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் என்றால் சரிதான். அந்த முன் விரோதத்தின் காரணமாக கந்தசாமி கொடுத்துள்ள பொய்யான புகாரில் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சம்பவத்தை எதுவும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | முத்துகுமார் |
| Father's/Husband Name: | கந்தசாமி |
| Village : | பிள்ளையார்பாளையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 36/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1–பழனிசாமி , A2–ரெங்கராஜ், A3–செல்லதுரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள். அ.சா.1 கந்தசாமி எனது தந்தை ஆவார். அ.சா.2–அருண்மொழி எனது மனைவி ஆவார். 17.01.2022 ம் தேதி மாலை 3.00 மணியிலிருந்தே நான் வேறு காட்டிற்கு உழவு ஓட்ட சென்று விட்டேன். மாலை 4.30 மணிக்கு எங்களது காட்டில் எனது தந்தைக்கும் எதிரி பழனிசாமிக்கும் அடிதடி சண்டை நடந்ததாக எனது மனைவி அருள்மொழி போன் மூலம் எனக்கு தகவல் கொடுத்தார். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். அங்கு வந்த பார்த்த போது எனது தந்தைக்கு முதுகிலும், இடது புற கண்ணிலும் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது. அப்போது எனது மனைவி அருள்மொழியும், பக்கத்து காட்டுக்காரரான லதாவும் அங்கு இருந்தார்கள். நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது தந்தை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு

அழைத்து சென்றேன். அங்கு அவர் சிகிச்சை பெற்றார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) சம்பவ இடத்தில் வைத்து சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் என்னை விசாரித்தனர், எனது தந்தை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவரிடம் யார் அடித்தார் என்ற விவரத்தை எனது தந்தை சொன்னார் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனது மனைவி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 500 மீ தொலைவில் இருந்ததால் சத்தமும் எனக்கு கேட்டது. போலிஸ் விசாரணையில் மேற்படி சத்தம் கேட்ட சங்கதியும், நான் அருகில் இருந்த சங்கதியும் சொன்னேனா என்றால் அவர்கள் கேட்காததால் நான் சொல்லவில்லை. எனது தந்தை தொடர்ந்து அவருக்கு வைத்தியம் பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்களுக்கும் பழனிசாமிக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். பழனிசாமி லாரி டிரைவராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் 2 மாதத்திற்கு ஒருமுறை தான் ஊருக்கு வருவார் என்றால் சரியல்ல.

(ii) சம்பவத்தில் பழனிசாமியே இல்லை என்றாலும், எனது தந்தை அவர் இருந்ததாக பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் எனது அப்பா கொடுத்துள்ள பொய்யான புகாரில் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கம் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | வெங்கடேசன் |
| Father's/Husband Name: | கருப்பண்ணன் |
| Village : | பிள்ளையார்பாளையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 48/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1–பழனிசாமி , A2–ரெங்கராஜ், A3–செல்லதுரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு அரும்பாவூர் போலிசார் முத்துகுமார் காட்டிற்கு வந்திருந்தனர். அங்கு வைத்து சம்பவம் குறித்து விசாரித்து ஜாமீனுக்காக என்னை கையெழுத்து போட சொன்னார்கள். நான் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர். பார்வை மகஜரில் உள்ளள முதலாவது கையொப்பம் மட்டும் (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலிஸ் விசாரணையில் கடந்த 19.01.2022ம் தேதி மாலை 4.00 மணிக்கு கந்தசாமிக்கும், பழனிசாமிக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக அரும்பாவூர் போலிசார் கந்தசாமியின் நெல் வயலுக்கு வந்து பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது கையொப்பத்தை மட்டும் ஒத்துக்கொண்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | தினேஷ் |
| Father's/Husband Name: | பெரியசாமி |
| Village : | பிள்ளையார்பாளையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 34/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1–பழனிசாமி , A2–ரெங்கராஜ், A3–செல்லதுரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் MBA படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 17.01.2022 ம் தேதி மாலை 4 மணியளவில் கந்தசாமி மகன் முத்துகுமார் எங்களது காட்டில் தான் Truck ஓட்டிக்கொண்டிருந்தார். அவருக்கு போன் வந்தவுடன் உடனடியாக அவர் அவரது காட்டிற்கு சென்றார். எங்களுக்கும் சத்தம் கேட்டது. நானும் உடன் சென்றேன். சம்பவத்திற்கு மறுநாள் அரும்பாவூர் போலிசார் கந்தசாமியின் காட்டிற்கு வந்து சம்பவம் குறித்து விசாரித்து என்னிடம் விசாரித்ததற்கு அத்தாட்சியாக கையொப்பம் வாங்கி கொண்டார்கள். என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை நான் அவ்வாறு தான் செய்தேன். பார்வை மகஜர் (அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலிசார் விசாரித்த போது முதல் விசாரணையில் சொன்னதை தான் சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் வந்த நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் வந்த போது கந்தசாமி, முத்துகுமார் ஆகியோர் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் வெற்று தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் நடந்தது என்ன என்ற விவரங்கள் சொல்லி அதனை எழுதிக்கொண்டு அதில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். முத்துகுமார் எனது நண்பர் என்றால் சரிதான். நண்பர் என்பதால் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை